# யாழ்ப்பாணத்தில் இந்து சமய அனுஷ்டானங்கள் பற்றிய சமகாலச் செல்நெறிகள்

**சி. ரமணராஜா**

இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**சுருக்கம்:** யாழ்ப்பாணத்து மக்கள் தமக்கேயுரியதான பாரம்பரியமிக்க உயர்ப்பண்பாட்டு விழுமியங்களைக் கடைப்பிடித்து வருகின்ற, நாகரிகம் மிக்க சமூகத் கூட்டத்தினராக இருந்து வருகின்றனர். ஆனால் நாட்டிலே காணப்பட்ட அசாதாரண சூழலமைவுகளும் அதனால் தோன்றிய இடப்பெயர்வுகள், அதன் விளைவுகள், மதமாற்றம், நவீன சாதனங்களின் ஆக்கிரமிப்பு, உலக மயமாக்கல், நாகரிக மாற்றம், நம்பிக்கை குறைவு போன்ற பின்புலங்களால் பண்பாட்டு விழுமியங்களைக் கடைப் பிடிப்பதில் இடர்பாடுகள் எழுந்துள்ளன. குறிப்பாக சமய அனுஷ்டானங்களை கடைப்பிடிப்பதில் பாரிய இடைவெளி தோன்றியுள்ளது. தனிமனிதன் சார்ந்த நிலையில் கடைப் பிடித்தொழுகும் அனுட்டானங்களின் முக்கி யத்துவத்தினையும் அவற்றைக் கடைப் பிடிப்பதில் சமகாலத்தில் ஏற்பட்டுள்ள சவால்களை இனங்கண்டு வெளிக்கொண்டு வருவதும், அவற்றின் தாற்பரியத்தினை உணர்த்துவதனூடாக மக்களின் தனித்துவமான மேம்பட்ட வாழ்வுக்கு முன்மொழிவுகளை எடுத்துரைப்பதும் இவ்வாய்வின் நோக்கங்களாகும். நாட்டிலேற்பட்ட அசாதாரண சூழ் நிலைகளும் அவற்றினால் ஏற்பட்ட மாற்றங்களும் சமய, சமுதாய நிலைகளிலும், அவை சார்ந்த அனுஷ்டானங்களைக் கடைப்பிடிக்கும் நிலைகளிலும் சவால்களை தோற்றுவித்துள்ளன. சமய அனுஷ்டானங்களின் பெறுமானங்களை அறிந்திராமை, இந்து ஆலயங்களின் நிர்வாகச் சீர்கேடுகள், சமய நிகழ்வுகளில் அவை சார்ந்த ஒழுங்கு முறைகள் பேணப்படாமை, சிறு தெய்வ வழிபாட்டு முறைகள், மனித வழிபாட்டு முறைகள் போன்றவற்றின் எழுச்சி, மாறி வரும் உலக மயமாக்கலும் நவநாகரிக மாற்றமும், அசாதாரண சூழலமைவுகளால் மனித நடத்தையில் ஏற்பட்ட மாற்றங்கள், நவீன இலத்திரனியல் சாதனங்களின் ஆக்கிரமிப்பு போன்றவற்றின் தாக்கங்களால் சமய அனுஷ்டானங்கள் கேள்விக்குறியாகி வரும் தன்மை இனங்காணப்பட்டுள்ளது. தனிமனிதன் பிறந்ததில் இருந்து இறக்கும் வரை கடைப்பிடித்துச் செல்லும் சமய அனுஷ்டானம் சார்ந்த நெறிமுறைகளே இவ்வாய்வின் எல்லையாகும். இவ்வாய்வினது ஆய்வுப் பிரதேசமாக யாழ்ப்பாணத்தைக் கொண்டுள்ளது. விபரண ஆய்வு, ஒப்பீட்டாய்வு, பகுப்பாய்வு, எடுத்துக்காட்டு ஆய்வு, மற்றும் கள ஆய்வு முறைமைகளின் துணைகொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. யாழ்ப்பாண சமூகத்தவர்களால் பாரம்பரியமாக கடைப்பிடித்து வந்த சமய அனுஷ்டானங்கள், சமகாலத்தில் அவர்களிடமிருந்து அவை அருகிச் செல்லும் தன்மை, அவற்றை அனுஷ்டிப்பதில் அவர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் போன்றன இவ்வாய்வின் மூலம் வெளிக்கொண்டு வரப்படுகின்றன.

அந்த வகையில் இவ்வனுஷ்டானங்களைக் கடைப்பிடித்துச் செல்லவும், அடுத்து வரும் சந்தயினருக்கு அவற்றைக் கடத்தவும் முன் வைக்கப்படுகின்ற தீர்வுகளாக பலவுள்ளன. மக்களிடம் சமகாலத்தில் செல்வாக்குச் செலுத்தி வருகின்ற இலத்திரனியல் சாதனங்களூடாக சமய நிகழ்வுகளுக்கு முதன்மை கொடுத்தல். முற்றும் அனுஷ்டானம் சார்ந்த கருத்துக்களை மிக எளிமையாகவும், சுருக்கமாகவும் நூல் வடிவில் வெளியிடுதல், சமய அனுஷ்டானங்களிலுள்ள அறிவியல் சிந்தனைகளை வெளிப்படுத்துதல், சொற்பொழிவுகள் உரைகள் மூலம் அவற்றுக்கு முக்கியத்துவமளித்தல், பாடசாலைகள், கல்லூரிகளிலுள்ள இந்து மன்றங்களினூடாக இவை சார்ந்த போதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல் மற்றும் இந்து சமய நிறுவனங்களூடாக அவற்றின் பெறுமதியினை உணர்த்துதல், CD, DVDக்கள் மூலம் அவற்றை வெளியிடுதல். பாடசாலைகள் கல்லூரிகளில் உள்ள இந்து மன்றங்களினூடாக இவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தல். சமய பாடங்களில் சமய அனுஷ்டான போதனைகளுக்கு முக்கியத்துவம் அளித்தல். சமய பாடம் யாவரினாலும் கற்பிக்கலாம் என்ற தவறான எண்ணம், கற்றறிந்தோர் மனங்களில் இருப்பது மாற்றப்பட வேண்டும். தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் சமய பாடங்களை கற்பிப்பதற்கு நியமிக்கப்படாமையினால் மாணவர்களுக்கு எழும் அனுஷ்டானம் சார்ந்த சந்தேகங்களையும், போதிய விளக்கங்களையும், அதில் உள்ள அறிவியல்சார் வெளிப்பாடுகளையும் வழங்க முடியாமல் உள்ளது. எனவே தகுதி வாய்ந்த ஆசிரிய நியமனங்கள் மூலம் பாடசாலைகளில் சமயக் கல்வியின் முக்கியத்துவம் உணர்த்தப்படல் வேண்டும். மாணவர் சமூகத்திற்கான இந்து சமய அனுஸ்டானம் பற்றிய அறிவையும் விழிப்புணர்வையும் பாடசாலை மட்டத்தில் ஏற்படுத்துதல். இத்தகைய விழிப்புணர்வினைப் பாடசாலைப் பாடவேளைகளில் தியான யோக வகுப்புக்களாக நடாத்துதல் கூட்டுப்பிரார்த்தனை, மற்றும் சமயம் சார்ந்த சுற்றுலா மூலமாக ஏற்படுத்தலாம் என்றவாறாக தீர்வுகளை முன்வைத்துச் செயற் படுத்துவதனூடாக சமய அனுட்டானங்களைத் தக்க வைத்துக் கொள்ள முடியுமென்பது இவ்வாய்வின் மூலம் பெறப்படுகின்றது.